செய்தி வெளியீடு எண். 42 நாள்: 22.01.2018

**தேசிய ஆதிதிராவிடர் நல ஆணையத்தின் துணைத் தலைவர் திரு.எல்.முருகன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு வழங்கப்படும் அரசு சலுகைகள் குறித்து திடீர் ஆய்வு மேற்கொண்டனர்**

திருவள்ளூர் ஆர்.எம்.ஜெயின் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் தேசிய ஆதிதிராவிடர் நல ஆணையத்தின் துணைத் தலைவர் திரு.எல்.முருகன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு வழங்கப்படும் அரசு சலுகைகள் குறித்து திடீர் ஆய்வு இன்று (22.01.2018) மேற்கொண்டனர்.

தேசிய ஆதிதிராவிடர் நல ஆணையத்தின் துணைத் தலைவர் திரு.எல்.முருகன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த பள்ளி மாணவிகளுக்கு வழங்கப்படும் அரசு சலுகைகள், சத்துணவு மற்றும் இன்ன பிற சலுகைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். பள்ளியில் பயிலும் மாணவிகளுக்கு சுகாதாரமான முறையில் கழிவறைகள் உள்ளனவா, அவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவில் முட்டை மற்றும் இதர உணவுகள் தரமானதாக உள்ளனவா என்பது குறித்து ஆய்வு செய்தனர். பின்னர், மாணவிகளின் வகுப்பறைகளுக்குச் சென்று 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்று பள்ளியை மாவட்டத்தில் சிறந்த பள்ளியாக மாற்ற வேண்டும் என்று கூறினார்.

இவ்வாய்வின்போது மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.த.இராஜேந்திரன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் திருமதி.மு.கலைச்செல்வி, திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கெ.ரா.திவ்யஸ்ரீ, திருவள்ளூர் வட்டாட்சியர் திரு.தமிழ்செல்வன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**